# இதயபூர்வமான வெசக் தின வாழ்த்துக்கள்

***"வெறுப்புணர்வானது இவ்வுலவ்கில் நிச்சயமாக வெறுப்புணர்வால் தணிக்கப்படுவது இல்லை. மாறாக அன்பினாலும் இரக்கத்தினாலுமே தணிக்கப்படவல்லது."***

இலங்கையும் ஏனைய உலக நாடுகளும் அமைதியின்மைக்கு மத்தியில் பயணிக்கும் இத்தருணத்தில் புத்த பகவானின் "தம்மபாத" மூலம் போதிக்கப்படும் மேற்கூறிய போதனைகள் எம்மை வழிநடத்துவதாக அமையும்.

2500 ஆண்டுகளுக்கு முன்னர் புத்த பகவான் போதித்த கருணை, சகிப்புத்தன்மை, மற்றவரை மத்தித்தல் போன்றவை இன்றளவும் இன்றியமையாததாக நிலைத்து நிற்கின்றன.

மதிப்புமிக்க இலங்கையரும் அன்றைய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சருமான கௌரவ லக்'மன் கதிர்காமர், பௌத்த மதத்தின் உலகிற்கான பங்களிப்பினை கருத்தில் கொண்டு ஐக்கிய நாடுகள் பொதுக்கூட்டத்தொடரில் பௌத்தர்களின் இப்புனித தினத்தினை சர்வதேச அனு'டிப்பு தினமாக பிரகடனப்படுத்துமாறு முன்மொழிந்தார். இதனையடுத்து 1999 ஐ.நா பொதுக்கூட்ட தீர்மானம் ஊடாக வெசாக் ஆனது சர்வதேச அனு'டிப்பு தினமாக அறிவிக்கப்பட்டது.

இன்று ஐக்கிய நாடுகள் சபை இலங்கையுடன் நிற்கின்றது, இலங்கை மக்களின் மீண்டெழும் திறனை கண்டு நாம் வியக்கிறோம். வன்முறையற்ற அமைதி வழியில் தற்போதைய நெருக்கடி நிலையிலிருந்து இலங்கை மீளும் என்ற எதிர்பார்ப்புடன் நாம் காணப்படுகிறோம்.

ஒருமைப்பாடு, கருணை, தூய்மையான நோக்கங்கள் போன்ற சிறந்த பண்புகளின் துணையுடன் மட்டுமே தற்போதைய சவால்களை கடந்து முன்னேறலாம்.

***"தீமை செய்யாமை, புண்ணியம் செய்தல், மனதை தூய்மையாக்கல் என்பனவே புத்தரின் போதனைகளாகும்"***